<u>நாகப்பட்டினம் மண்டல கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை</u>

**முன்னிலை :** திரு. அ.முகமது நாசர், எம்.எஸ்.சி.,
துணைப்பதிவாளர்,
நாகப்பட்டினம்

ந.க.02/2022/பதொ, நாள்: 08.02.2022

பொருள் : பொதுப்பணிகள் – கூட்டுறவுத்துறை – தமிழ்நாடு அமைச்சு பணி – தொகுதி IV பணிகள் – 2018–2019 மற்றும் 2019 – 2020 – திரு.வெ.வெங்கடேஷ்குமார், இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடல்– தொடர்பாக.

பார்வை : 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்), சென்னை அவர்களின் கடிதம் ந.க.11800/2020/பதொ3(1), நாள் : 24.07.2020

2. நாகப்பட்டினம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.1794/2020/அ1, நாள் : 29.07.2020

*********

<u>ஆணை:</u>

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV பணிகள், 2018–2019 மற்றும் 2019 – 2020 க்கான தேர்வு மூலம் திரு.வெ.வெங்கடேஷ்குமார், இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு, பார்வை (1) – இல் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலக இணைப்பதிவாளர் (நிதி மற்றும் வங்கியியல்), சென்னை அவர்களின் கடிதம் வழி நாகப்பட்டினம் மண்டல கூட்டுறவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2) – இல் காணும் நாகப்பட்டினம் மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர் / பணியாளர் அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி தனியர் இணைப்பதிவாளர் அலுவலக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ளார், தனியர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் சேர்ந்த 17.08.2020 முற்பகல் முதல் பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மாண்பமை சென்னை / மதுரை கிளை உயர்நீதிமன்றத்தில் 2018–2019 மற்றும் 2019–2020 தொகுதி IV–இல் குறிப்பிட்ட பணிகளுக்கான நிலுவையிலுள்ள ரிட் மனுக்களில் இறுதி முடிவுக்குட்பட்டு வரன்முறை படுத்தப்படும்.

| வ. எ ண் | பெயர் | தேர்வாணைய வரிசை எண் | தேர்வாணைய பதிவு எண் | பணியேற்பு நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு. வெ.வெங்கடேஷ் குமார், | 33 | 2001017033 | 17.08.2020 முற்பகல் | 17.08.2020 முற்பகல் |

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தகுதிகாண் பருவம் முடித்ததற்கான ஆணைகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

அ. [signature] 8-2-2022

துணைப்பதிவாளர்
நாகப்பட்டினம்

08/02/2022

பெறுநர் : தொடர்புடைய பணியாளர்

நகல் :

1. பதொ பிரிவு– இருப்புக்கோப்பு2022
2. உதிரி